Reg. No. M. 2997.

281

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT,
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி
நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-௵ ஆடி-மீ -௧௮௳ (2—8—34) } No. 36.

## தேவாரம்

நிறைந்த மாமணலைக் கூப்பி நேசமோடாவின்பாலைக்
கறந்து கொண்டாட்டக்கண்டு கறுத்ததன்றுதைத்தாளை
யெறிந்த மாணிக்கப்போதே யெழில்கொள்தண்டீசனென்னச்
சிறந்தபேரளித்தார் சேறைச் சென்னெறிச் செல்வனாரே.

மறித்திகழ்கையினன் வானவர்கோனைக் குளிர்ந்தெழுந்த
பழக்கமோடர்ச்சித்த மாணிதன்னாருயிர் கொள்ளவந்த
அழற்போதிமூவிலை வேலுடைக்காலனைத் தானலற
உழக்கிய சேவடியான் கடவூருறையுத்தமனே.

மாணிபால்கறந்தாட்டி வழிபட
நீணுலகெலாமாளக் கொடுத்தவன்
ஆணியைச்செம்பொனம் பலத்துண்ணின்ற
தாணுவைத் தமியேன் மறந்துய்வனே.

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்)

# வித்தகம்

புதுவை,
பவ-ஹூ ஆடி-மீ 18உ

## சகச நிட்டை

சீவர்கள் கட்டுக்கள் நீங்கி வீடடைதற்கு நிட்டை இன்றியமையாதது என நூல்கள் முறையிடுகின்றன. "ஒருவர் நிட்டையில் இருக்கின்றனர்" என்றால் அவரைத் தெய்வீகம் வாய்ந்தவர் எனச் சிறப்புறக் கொண்டாடுவது உலகியல். ஆதலால் வாய்மையான நிட்டை இன்னது என அதன் இயல்பு ஈண்டு ஒரு சிறிது கூறப்படுகின்றது.

நிட்டை என்றால் என்னை? அது தான் நிலைத்து நிற்றல்—அவச்சலனம் இன்றி அமைதி பெறுதல் என்று கூறப்படும். நிலைத்தல் எதற்குரியது? எனின், ஓவாது அசைந்து அவச்சலனமடையும் மனதிற்கே உரியது என்று கூறப்படும். மனம் நிலைப்பது—அமைதியுறுவது என்றால் எளிதன்று. மா அரிது! அரிது! அரிது! "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என ஆன்றோரும் கூறினர். ஊசலாடி அலமரும் மனம் நிலைத்தற் பொருட்டே—அமைதி—சாந்தி பெறற் பொருட்டே அரும் தவம் உஞற்றப்படுவது. சலிக்கும் மனமே சீவன்; சலிப்பின்றி—சலனமின்றி இருப்பதே சிவம்—பிரமம் என்ப. மனம் சலனமடைவதே சீவத்துவம். மனம் சலனமற்றுச் சாந்தி பெறுவதே இன்பம்—ஆனந்தம்—ஆனந்த மயமாகிய பிரமத்தை அடைதல்—பிரமமாதல்—முத்தி நிலை என்க. மனம் வேறு சரீரம் வேறன்று. மனம் வசப்பட்டால் சரீரமும் வசப்படும். சரீரம் வசப்பட்டால் மனமும் வசப்படும். இவை ஒன்றற்கொன்று (அந்நியோந்நிய) சம்பந்தமுடையன. மனம் அமைதி பெறுதற்குரிய நிலைமை எனப்படும் நிட்டையும் இயற்கையும் செயற்கையும் என இருவகைப்படும். இயற்கை உண்மையானது — நித்தியமானது — நித்தியத்துவம் அளிப்பது. செயற்கை பொய்ம்மையானது—போலியானது—அநித்தியமானது — பிறவி நெறி காட்டுவது. செயற்கை நிட்டை போலி நிட்டை எனப்படும் — அவயோகம் எனப்படும்—அசட்டு யோகம் எனப்படும். உண்மை நிட்டையாகிய இயற்கை நிலைமையே சகஜ நிட்டை எனப்படுவது — சிவயோகம் எனப்படுவது. சகஜம் இயற்கை என்பன ஒன்றே. இயற்கை நிட்டை சீவ முயற்சி என்னும் முனைப்பால் ஆகாதது; இயற்கை என்னும் திருவருட் சகாயத்தால் ஆவது; உலகர் போல் வாழ்ந்து இயற்கைக்கு மாறுபடாது நிறை முறையான அருந்தல் பொருந்தல்கள் அமைந்து ஒப்புரவொழுகுதலால் ஆவது; முன்னிலையாவும் தன்னிலையாகி உறவுபடுதலால் ஆவது என்க. பிரபஞ்சமாகிய முன்னிலையாவும் சிவ சொரூபமே—பிரமமே யாதலால் அம் முன்னிலையாகிய பிரமத்தை நிறை முறையோடு உறவு படுத்தியவனே—உண்டவனே பிரமமாவன். இவனே இயற்கை நிட்டை எனப்படும் சகச நிட்டையுடையவன் — சீவன் முத்தன் என அறிதல் வேண்டும். செயற்கை சீவ முயற்சியால் ஆவது; முனைப்போடு கூடியது. அது சவிகற்பம் நிர்விகற்பம் என இருவகைப்படும். சவிகற்பம் விகற்பத்தோடு கூடியது—விகற்பம் என்னும் வேறுபாடுடையது—உருவபாவனை உடையது. நிர்விகற்பம் சவிகற்பம் இல்லாதது; உருவபாவனை — உருவ வேறுபாடு இல்லாதது. எனினும் காண்பான் காட்சி காட்சிப் பொருள் என்னும் ஞாதுரு ஞான ஞேயங்களாகிய திரிபுடியுடையதாதலால் செயற்கை நிட்டை எனப்பட்டது. செயற்கை எல்லாம் முனைப்போடு கூடியனவாம். ஆதலால் சவிகற்பம் நிர்விகற்பம் என்பன உபாசக நிட்டை எனப்பட்டன. பின் வரும் பிரமாணமும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்துகின்றது.

### சுத்தசாதகம்

சத்துவகுணமேவருத்தனையாகித்
தங்கியேயுளத்தினுணின்றால்
ஒத்துறநிட்டைகூடிடுமிலதே
லொருவியிச்சகலகேவலத்தைத்
தொத்துறுமன்றிக்குணமுமாயையினிற்
றோன்றினதாதலாலிந்த
ஒத்துறுநிட்டையுண்மையேயன்றாம்
உபாசக நிட்டை யென்றுணரே.

ஆதலிற்சகலகேவலசுத்த
மடைந்திடலிங்குமாயையதாம்
வாதனையொழிந்துங்குணமிருத்தலினிவ்
வடிவகன்றிடிற்பினுஞ்சுத்த
சாதமுற்றிடுதலன்றியே வீட்டைத்
தானடைந்திடுதலேயின்றாம்
ஏதமிலருளிலுண்மை நிட்டையினை
யெய்தினோர் சீவன்முத்தர்களே.

(ஷை செ. 68, 69.)

இவற்றால் சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகள் உபாசக நிட்டையே என்பதும் இந்நிட்டையாளர் இறந்து பிறவி வலைப்படுபவரே என்பதும் திருவருட் சகாயத்தால் அடையப்படும் உண்மை நிட்டையாகிய சகச நிட்டை யுடைய மெய்யடியாரே சீவன் முத்தர் என்பதும் நன்கு வற்புறுத்தப்பட்டமை கண்டு கொள்க. செயற்கை வகையால்—முனைப்போடு கூடிய உபாசனை முதலியவற்றால் இயற்கை நிட்டையாகிய சகச நிட்டை கைவருதல் முடியாத காரியம். உபாசக நிட்டை நிலை யற்றது; சகல கேவலமாய் மாறிக் கொண்டே இருப்பது. சகச நிட்டையாகிய இயற்கை நிட்டையோ என்றால், என்றும் ஒரே பெற்றித்தாகிச் சுத்த நிலையாயே நின்றிடும் என்க. ஒரு குறியைப்பற்றி ஒருவாறு நிலைத்து நிற்றலால் சவிகற்ப நிர்விகற்பங்களும் நிட்டை எனக் கூறப்பட்டன வாயினும் அஃது உபசாரமான கூற்றேயாகும். அவை அநித்தியமாய்ப் பிறவி நெறி காட்டுதலால் போலியாகிய பொய்ம்மையே யாகும். இயற்கை நிட்டையாகிய சகச நிட்டை யுடைய மெய்யடியார்க்கும் சவிகற்ப நிட்டையாளர்களாகிய உபாசக நிட்டையாளர்க்கும் இடையீடு அளவிடுதற்கு அரியது. உபாசக நிட்டையாளர் முன்னிலையாகி விளங்கும் பிரமத்தை நிறை கண்டு பஞ்சீகரணிக்க அறியாது ஒருபால் ஒதுங்குவர். உபாசக நிட்டையும் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்பப் பலப்பல வகையின தாகும்.

உபாசக நிட்டையாளர் உண்மை வேதம் முதலியனவற்றை அறிய மாட்டார். சத்தியமாகிய மறை மறை என்னும் வேதம் உலக மாக்களுக்கு என்றும் மறை பொருளாய் இருத்தல் போலவே உண்மை நிட்டையாகிய சகச நிட்டையும் அதனால் அடையப்படும் உண்மை முத்தியும் என்றும் மறை பொருளேயாகும். மேலே கூறிய சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர்களாகிய உபாசக நிட்டையாளர் இருவினை ஒப்பு மல பரிபாகம் இன்னவை என அறியமாட்டார்; அறிந்தவர் போல உழறிக் குழறுவர்; வேதம் முதலாக உலகில் வழங்கும் நூல்களைத் தமது பக்குவத்துக்கு ஏற்றவாறு பொருள் செய்து சில நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுவர்; தாம் அறிந்தவைகளே உண்மைகள் என்று பிறர்க்கு உபதேசம் செய்வர்; பக்குவம் வந்துவிட்ட தென்று பிறர்க்குத் தீக்கை செய்து வைப்பர்; பஞ்சாக்கர உபதேசமும் செய்வர்; ஆரூடங் கூறுபவர் போலப் பிறருடைய யோக க்ஷேமங்களும் கூறுவர்; இன்னோரன்ன பகடி வித்தைகள் பல காட்டுவர்; அதுவாகும் நெறி யறிந்து அதுவாகாமல் "சிவோகம்" என்று வாயோடு கண்மூடிச் செம்மாந்து வீற்றிருந்து அதுவானவர் போலப் பாவனைப் பண்ணிக் கொண்டு, நாத அந்தமாகிய வேத அந்தத்தையும் சித்தின் அந்தமாகிய சித்தாந்தத்தையும் சமரசமாகக் கண்ட வித்தகச் சித்தராகிய தத்துவப் பெரியார் போலத் தம்மை மதித்துச் சிவாநுபவங்கள் என்று சில பலவற்றை வித்தியா சாமர்த்தியத்தால்—நிறை முறை இல்லாக் கற்பனைகளால் சாத்திரப் பெயர் புனைந்து பிரகடனம் செய்வர்; செத்த பின்பு தான் முத்தி என்று சத்தியமும் செய்வர். இவரினும் தாழ்ந்த நிலைமையுடையோர் இவர் வாக்குக்கள் முழுவதும் வேத உண்மைகளே என நம்பி அமைந்து அவற்றை அநுசரித்துச் சாதலடைவர். இந் நிட்டையாளர் வாய்மையான இயமம் நியமம் இருப்பு உயிர்நிலை மனஒருக்கம் தாரணை தியானம் சமாதி இன்னவை எனவும், ஆறு ஆதாரங்களின் இலக்கணம் இன்னவை எனவும், ஆறு பன்னிரண்டான காரணம் இன்னது எனவும், திதி பதினைந்து சூரியன் வீடு பன்னிரண்டு இன்னவை எனவும், அமாவாசை பூரணை இன்னவை எனவும், வாய்மையான புரோஹிதன் இவன் எனவும், அவனுக்குக் கொடுக்கும் தானம் தக்ஷிணை இன்னவை எனவும், சிவலிங்கம் இன்னது எனவும், சிவலிங்க பூசை சத்தி பூசை வாம பூசை இன்னவை எனவும், ஆலயங்களில் நிகழும் சோடச உபசாரங்களின் உண்மை இன்னது எனவும், குரு பத்தினி தாரை சந்திரனைக் கூடிப் புதனை ஈன்றாள் என்பதன் உண்மை இன்னது எனவும், தசரதன் புதல்வன் தசக்கிரீவனைச் சம்மாரஞ் செய்தான் என்பதன் உண்மை இன்னது எனவும், ஐவர் தொண்ணூற்றறுவரைச் சம்மாரஞ் செய்தனர் என்பதன் உண்மை இன்னது எனவும், விக்கின விநாயகர் அவதாரம் கயமுக சம்மாரம் முருகன் அவதாரம் சூரசம்மாரம் வள்ளி தெய்வயானை திருமணம் தேவி அவதாரம் மகிஷாசுர சம்மாரம் திரிபுர சம்மாரம் அமிர்த மதனம் முதலிய இன்னோரன்ன நிறை முறை அமைந்த உண்மைக் கற்பனை ரூபமாகத் தோன்றும் கொள்கைகள் பலவற்றின் உட்பொருள் இன்னது எனவும் ஒரு சிறிதும் அறிய மாட்டார். ஆயினும் இவர்கள் தற்போத சொரூபிகளாதலால் அறிந்தவர் போலக் கர்ஜனை செய்வர். தாம் கைக் கொண்ட "நெறி யல்லா நெறி" (திருவாசகம் அச்சோப்பதிகம் செ. 2.) களே உண்மை என நம்பி அமைவர். அசுத்த நாதங்களையே சுத்த நாதங்கள் எனவும் அசுத்த ஒளியையே அமல ஒளியாகிய நந்தி ஒளி எனவும் மயங்குவர். சோதியைக் கண்டு விட்டோம் எனவும் மரணத்தைக் கடந்து விட்டோம் எனவும் உண்மை நிலையை அடைந்து விட்டோம் எனவும் துணிந்து கூறி உவகையோடு அமைவர். "தழலெரிமடுத்த நீரில் திளைத்து நின்று ஆடுகின்ற ஆமைபோல" வருந்தித் திடீர் எனப் பிணமாவர். அஃதாவது இவர் தூலத்துள் அசுத்த நிறையே சிறிது சிறிதாக ஆக்கமுறுதலால், மூலாக்கினி மேலெழுந்து அப்புக் கூற்றுக்கு அடக்கமாகி அசுத்த "ஐ" என்னும் சிலேத்துமம் மேலிடுதலாகிய சன்னி என்னும் யம வேதனையைத் தம் தம் கர்மத்துக்கு ஏற்றவாறு சிறிதாகவும் பெரிதாகவும் அந்தரங்கமாகவும் வெளிப்படையாக

வும் அநுபவித்து வருந்தி நிட்டையில் இருந்த பாவனையாகத்தான் பிறவாறு தான் அத்தூலம் பிணவியலடைய மாண்டு பிறவி வலைப்படுவர் என்பது. இவர் இவ்வாறு எத்தனையோ பிறவிகள் எடுத்து அவதிப்பட்டுப் புண்ணிய சென்மமாகிய ஒரு சென்மத்தில் உண்மை பிறிதொன்று இருக்க வேண்டும் என அதனை நாடி அறியும் நிலையை அடைவர். இவ்வாறு பல்லாற்றானும் நைந்து நைந்து உருகி உருகி அழுது அழுது தற்போதம் சிறிது நைய நைய உலகத்தில் தம்மைப் போன்ற பாவிகள் இல்லை என உணர்ந்து அலறி அலறித் தம்மையே நொந்து நொந்து பல பிறவிகளிற் பட்ட துன்பங்கள் எல்லாம் ஒருங்கு சேர—அவற்றின் நிறை அதிகப்பட இவர் அகத்தில் அகண்டாகார அமல சொரூபம் திவலையாய் இருந்தது பக்குவம் பெற்று விளைவேறி முன்னிலையில் குரு வடிவாய் போந்திடும். இத்தகைய பக்குவம் பொலியப் பெற்றவர் தாம் இயற்கை நிட்டையாகிய சகச நிட்டைக்குரிய உபதேசம் பெற்றுச் சீவன் முத்தராதற்கு அருகராவர் என அறிதல் வேண்டும்.

சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகள் பிறவி நெறி காட்டும் அசட்டு யோக நிலையே யன்றிச் சிவயோக நிலையன்று என்பது "வித்தகம்" இல. 32-இல். "யோகம்" என்னும் கட்டுரையிலும் சிறிது விளக்கப்பட்டது. ஆங்கும் காண்க. சவிகற்பம் நிர்விகற்பம் என்னும் போலி நிட்டைகளால் பிரமையடைந்து நிற்கும் உலகினர்க்கு உண்மை நிட்டையாகிய சகச நிட்டையின் இலக்கணத்தை ஒருவர் உரைத்தால், அவர் மதி அதனைப் பற்றுவது முடியாத காரியமே! சீவர்கள் அனைவரையும் மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கச் செய்து உண்மை இன்னது என அறிய ஒட்டாமல் தடை செய்வதும் ஒருகால் தெய்வாதீனமாய் யாராவது ஒருவர் உண்மை இன்னது எனத் தெரிவிக்க நேர்ந்துழியும் அதனை ஒப்புக் கொள்ளாது அவரை முனிந்து பித்தர் என எள்ளி நகையாடச் செய்வதும் அறியாமையே யன்றி வேறு என்னை? உபாசக நிட்டையாளராய் மிகப் பெரிய மேதாவி எனப் பலராலும் போற்றப்பட்டவரும்—போற்றப்படுபவருமாகிய நமது தாயுமானப் பெருந்தகையே "சகச நிட்டைக்கும் என் சிந்தைக்கும் வெகு தூரம்" என இரங்கி உண்மையை உரைத்து அச்சகச நிட்டை கைவரப் பெறாது தூலம் பிணவியலடைய மாண்டு போயினர் என்றால், அன்னவரினும் மிக்க கீழ் நிறைப் பொலிவுடைய பாபிகளாகிய எம்போலிய உலக மாக்கள் சகச நிட்டையை அறிய முடியாமையும் வியப்பாகுமா? எத்தனை சாமிகள் எத்தனை குட்டிச் சித்தர்கள் இயற்கை நிலையாகிய சகச நிட்டையை அறியும் புண்ணியம் இல்லாதவர்களாய்ச் செயற்கை நிட்டைகளை அநுட்டித்து வாயோடு கண் மூடி மயக்க முற்றுப் பிணம் போலக் கிடக்கின்றார்கள்! இவர்களையே வாய்மையான நிட்டையாளர்கள் என உலக மாக்கள் மருளுகின்றார்கள். சிலர் வேடத்தால் அச்சம் விளைத்து மாயா காரியமாகிய சித்திகள் சில காட்டித் தம்மைச் சித்தர் மரபினர் என்று ஓலமிடுகின்றனர். இன்னோர் "சித்தர் மரபு" இன்னது என ஒரு சிறிதும் அறியார் — அறிவதும் எளிதன்று. சித்தர் மரபு இன்னதென்பது அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும். இன்னும் சிலர் நிர்வாணிகளாய்ப் பனிக் கட்டிகள் நிரம்பிய இமயம் முதலிய மலைகளில் இத்தகைய செயற்கை நிட்டைகளை அநுட்டித்துப் பிணம் போலக் கிடக்கின்றனர் என்ப. வெள்ளையர்களும் இவர்களே பெரிய தவசிகள் — மகான்கள் என மருளுகின்றார்கள் ஆம் உலகம் இவ்வகையான நிலைமையில் இருக்கும் போது இயற்கை நிட்டையாகிய சகச நிட்டையை ஒப்புக் கொள்வது எப்படி? ஒவ்வொருவரும் அநுபவத்திற் கண்டல்லவா ஒப்புக்கொள்ள முடியும்? வேடத்தால் உலகம் மயங்கு மன்றி இயற்கையை அறிவதும் ஒப்புக் கொள்வதும் முடியாத காரியமே. வேடம் முத்தி நெறி செல்வோர் இலக்கண மன்று; உலகத்தவரை வெருட்டிப் பொருளும் பூசையும் பெறுதற்கே உரியதாகும். இயற்கையை அறிவதற்கும் அறிந்தவாறே ஒழுகிப் பயனடைவதற்கும் அநந்த கோடி சென்ம புண்ணியம் வேண்டுமல்லவா? சீவர்கள் சித்திரக் கற்பனைகளையே சிந்தித்து அவற்றையே கண்டு பிரமை அடைகின்றார்கள். இதுதான் அவர்களுக்குச் சகஜம். வாய்மையில் சகஜம் யாதெனில்—சகச நிட்டை யாதெனில்,

"..............................................
செவிதினிலடையுஞ்சகசநிட்டையதே
திருவருடன்னில்வந்ததுவாம்
தவிருதல்கூடலின்றியேயங்குத்
தங்கிநின்றிடுநின்றபடியே."

என விருத்தாசலத்துப் பெரிய நாயகி அருளால் எழுந்த சுத்த சாதகம் (செ. 56) கூறியவாறு திருவருட் சகாயத்தால் முறையாக அடையப்பட்டுப் பூரணமாய்த்தவிருதல் கூடுதல் இன்றி ஒரே பெற்றித்தாய் நிற்கும் இயற்கை நிலையே என்று கூறப்படும்.

மேலே கூறிய சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளை மணிவாசகப் பெருமான் திருவாசகத் தெய்வ மறையில் திருவண்டப்பகுதி அகவலில் குறிப்பாகக் கண்டிக்கின்றார்.

"மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி [திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க்கு [ஒளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க்கு [ஒளித்தும்
..............................................
..............................சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும் [போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
..............................................
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித் [தும்"

என்பனவற்றை உற்று நோக்குக.

இவ்வாறெல்லாம் தவம் உயன்றோர்க்கும் ஒளித்தும் என்றதனால் ஷை இரண்டு நிட்டையாளரும் இறைவன் திருவடி கண்டு உய்தி யடைதல் முயற்கொம்பே என அவ் இரண்டு நிட்டைகளாலும் பயனில்லை என்றே மணிவாசகர் கூறிவிட்டனர் அல்லவா? அடுத்த அடிகளால் என்ன தெரிவிக்கின்றார்?

"தன்னே ரில்லோன் றானே யான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட் கொண் டருளி"

என்றார். இயற்கை நிலையாகிய சகச நிட்டை இதுவே என அறிக. இன்னும்,

"புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
யுண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா
மன்ன வென்னையோர் வார்த்தையுட் [படுத்துப்
பற்றினாய்........................"

(ஷை செத்திலாப்பத்து செ. 2)

என்னும் செய்யுளாலும் சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளால் பயனின்மை நன்கு வலியுறுத்தப்பட்டமை கண்டு கொள்க.

"...............இருந்தபடி இருங்கோன்"

(கந்தரலங்காரம்)

எனவும்

"......சும்மா இரு சொல்லற............"

(கந்தரநுபூதி)

எனவும் அருணைகிரி நாதர் அருளியனவற்றாலும் சகச நிட்டையின் இயல்பு நன்கு புலப்படும். இன்னும் மணிவாசகரே சகச நிட்டை எவ்வகையான குறிப்பும் அற்றது எனக் கூறுகின்றார்.

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புர முந்தீபற.

(ஷை திருவுந்தியார் செ. 3)

தச்சு—மருளுடம்பினது அசுத்த பௌதிக பஞ்சீகரண நிறை—அசுத்த நிறை. விடுத்தல்-கெட்டுத் திரிதல்—விமலமாக மாறுதல். "அடி" எனப்பட்டது சகச நிட்டையாளர்க்குரிய சூக்கும கல்பமாகிய வேத ஒலி. எப்பெருமான் திருவடி எனப்படும் அமல ஐகார ஒலி இதுவே. இதுவே சாமகானம் — வாய்மையான சாம வேதம். அருளமுதம் என்பதும் இதுவே என அறிதற்பாற்று. "அச்சு" என்பது குறிப்பு. "குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்து" (ஷை அச்சோப்பதிகம் சே. 2.) எனப் பின்னும் கூறப்பட்ட தறிக. மும்மல காரியமாகிய உடலுயிர் அம்மலங்கள் நீங்கி அமலமடைதலே சகச நிட்டையாலாய பயன் என்பார் "அழிந்தன முப்புரம்" என்றார். "முப்புரமாவது மும்மல காரியம்" எனத் திருமூலர் அருளியதும், (திருமந்திரம் 2-ம் தந்-2-வது பதிவலியில் வீரட்டம் எட்டு செ. 5)

"எற்றார்மூதூர் எழினகை யெரியின் வீழ் [வித்தாங்கன்
றருட்பெருந்தீயின் அடியோம் அடிக் [குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்"

எனவும்,

"தெருளு மும்மதில் நொடிவரை யிடிதரச் [சினப்பதத் தொடு செந்தீ
அருளு மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய [அதிசயங் கண்டாமே"

(ஷை அதிசயப்பத்து செ. 10.)

எனவும் மணிவாசகர் அருளியனவும் மேலே கூறிய உண்மையை நன்கு வலியுறுத்துதல் கண்டு கொள்க. "பெருந்துறைக்கோன் முன்பால் முழங்கு முரசு" (திருவாசகம் திருத்தசாங்கம் செ. 8.) எனப்படும் சாமகானமாகிய இவ் அரிய பெரிய அருளமுதம் உண்ணும் சகச நிட்டையாளர் தூலம் அருளாகிக் கரையும் என்பதனைப் பின் வரும் சுத்தசாதகச் செய்யுளும் நன்று வலியுறுத்துகின்றது.

### சுத்தசாதகம்

சகசநிட்டையதுலபித்திடுங்காலை
தம்முயற்சியதொன்றுமின்றிச்
சகசமதாகித்தன்னுளமதனிற்
றானின்றிங்கிடைவிடாதூறும்
சுகஅருளமுத மதனையேயருந்தித்
தொல்வடிவதுமெள்ளக்கரைந்து
சுகவருள்வடிவாய்ச்சுட்டெலாமருளாய்த்
தோன்றநின்றிடுநின்றபடியே.

(ஷை செ. 63)

"அருளமுதம் புரியாயேல் வருந்துவன்" [திருவாசகம் திருச்சதகம் (அறிவுறுத்தல்) செ. 13.] என மணிவாசகர் இரங்கியமையாலும் அருளமுதமாண்பு நன்கு புலப்படும். இவ் அருளமுதமே இறைவன் வடிவம். இவ் உண்மை, "என்னானை என் அரையன் இன் அமுது என்று எல்லோமும் சொன்னோங்கேள்" (ஷை திருவெம்பாவை செ. 7) என்பதனாலும் நன்று வலியுறுகின்றது. பிரமம் அமுத வடிவம் என உபநிடதங்கள் கூறுவதும் அறிக. மேலே காட்டிய சுத்தசாதகச் செய்யுளால் சகச நிட்டை என்பது இயற்கையொடு மாறுபாடாத நிலையே அஃதாவது உலகர் போல் வாழ்ந்து ஒப்புரவொழுகும் நிலையே என்பதும், அத்தகைய நிலைதான் திருவருட் சகாயத்தாலன்றிச் சீவ முயற்சியால் அடையப்படாதது என்பதும், இந் நிட்டையாளரே அருளமுதம் உண்டு தமது தூலம் அருளாகிக் கரைய அருண்மயமாய் யாண்டும் நிறைந்து நிற்பார் என்பதும் நன்று புலப்படுதல் கண்டு கொள்க. சவிகற்ப நிர்விகற்ப நிட்டையுடைய சீவர்கள் அந்நிலையில் எத்துணைக்காலம் வீற்றிருப்பினும் இறந்து பிறவி வலைப்படுபவரேயன்றி அருளமுதம் உண்டு நித்தியத்துவம் பெறுதல் முடியாத காரியமே என்பது சொல்லாமலே அமையும். உபாசக நிட்டையின் சிறுமையையும் சகச நிட்டையின் அருமை பெருமையையும் நன்று வலியுறுத்தும் பிரமாணங்கள் தத்துவப் பெரியார் அருளிய வேத நூல்களிலும் பிற நூல்களிலும் மிகப்பலவாய்

× சர்வம் பிரமமயம் என்றும்.....

உள்ளன. அவற்றுள் ஒரு சில இங்கே காட்டப்படுகின்றன.

## அப்பர் தேவாரம்.

கன்றுநோக்கிலென்பட்டினியாகிலென்
குன்றமேறியிருந்தவஞ் செய்யிலென்
சென்றுநீரிற்குளித்துத்திரியிலென்
என்றுமீசனென் பார்க்கன்றியில்லையே.

கோடிதீர்த்தங்கலந்துகுளித்தவை
ஆடினாலுமரனுக்கன் பில்லையேல்
ஓடுநீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடிவைத்திட்ட மூர்க்கனொடொக்குமே.

(ஷை பாவநாசத் திருக்குறுந்தொகை செ. 8, 9.)

["என்றும் ஈசன் என்பார்" என்பது எஞ்ஞான்றும் திருவருளையே கண்டு நிற்கும் சகச நிட்டையை உணர்த்தி நின்றது. "அரனுக்கு அன்பு இல்லையேல்" என்பது நிறை முறையான அருந்தல் பொருந்தல்களால் அரனுக்கு அன்பு செய்யாத விடத்து அஃதாவது அன்பை ஆக்கமுறச் செய்யாத வழிச் சகச நிட்டை கைவரப்பெறாத நிலைமையை உணர்த்தி நின்றது. சகச நிட்டை கைவரப்பெறாத இடத்து, ஓட்டைக் குடத்து உள்ளநீர் விரைவில் வெளியே சென்று ஒழிதல்போல, நவத்துவாரமுடைய இவ்வுடம்பு நித்தியத்துவம் பெறமுடியாது உயிர் அதனைவிட்டுப் பிரிதலாகிய பிறவி நெறியே உளதாகும் என்பது இதனால் நன்கு வற்புறுத்தப் பட்டது.]

ஞானத்தாற்றொழுவார்சிலஞானிகள்
ஞானத்தாற்றொழுவேனுனை நானலேன்
ஞானத்தாற்றொழுவார்கடொழக்கண்டு
ஞானத்தாலுனை நானுந்தொழுவனே.

(ஷை தனித்—திருக்குறுந்தொகை செ. 2.)

## திருமந்திரம்

எண்ணா யிரத்தாண்டு யோக மிருக்கினுங்
கண்ணா ரமுதனைக் கண்டறி வாரில்லை
யுண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்கிடிற்
கண்ணாடி போலே கலந்திருந் தானே.

(ஷை 3-ம் தந்-1வது 7-வது தியானம் செ.6)

அஞ்சு மடக்கடக் கென்ப ரறிவிலார்
அஞ்சு மடக்கு மமரரு மங்கில்லை
அஞ்சு மடக்கில சேதன மாமென்றிட்
டஞ்சு மடக்கா வறிவறிந் தேனே.

(ஷை 7-ம் தந்-25—வது. ஐந்திந்திரிய மடக்கு முறைமை செ. 3)

[இவற்றின் பொருள் "யோகம்" என்னும் சட்டுரையில் ("வித்தகம்" இல. 33) விளக்கப்பட்டன. ஆங்குக் காண்க. "அஞ்சும் அடக்கா அறிவு" என்பது நிறைமுறையான அருந்தல் பொருந்தல்களால் ஆகும் தூய உணர்ச்சியால் இயற்கையோடு ஒன்றி நிற்றலாகிய சகச நிட்டையை உணர்த்தி நின்றது.]

உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூடர் [காள்
கரையற்றதொன்றைக்கரைகாணலாகுமோ
திரையற்றநீர்போற்சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தனன் புரிசடை யோனே.

(ஷை 9—ம் தந்.—25-வது வரைவுரைமாட்சி செ. 2.)

["திரையற்ற நீர்போல் சிந்தை தெளி"தல் என்பது நிறை முறையான அருந்தல் பொருந்தல்களால் "ஊசலாட்டும் இவ் உடல் உயிராயின இருவினை" சமரசப்பட்டபோது உளதாகும் சகசநிட்டையை உணர்த்தி நின்றது. "புரையற் றிருந்தான் புரிசடையோன்" என்பது "புறப்பட்டுப் போகான் புரிசடையோனே" "கண்ணாடிபோலே கலந்திருந்தானே" (திருமந்திரம்) என்பனவற்றின் பொருளையுடையது. "ஈனமற்ற காயமாய்" (சிவவாக்கியர்) "ஈனமில்காயம்" என்னும் பிரணவ வடிவமாய் இருப்பன் ஈசன் என்பது பொருளாகும். இதனால் சகச நிட்டையாளர் உடலுயிர் அமல மடைந்து நித்தியத்துவம் அடைதல் கூறப்பட்டது.]

## அருணகிரிநாதர் பாடல்

திருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் [சுற்றிமுறித்
தருத்தி யுடப் பையொறுக்கிலென் ஞஞ்சிவ [யோகமெனுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு [நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி [கைகண்டதே.

(கந்தரலங்காரம். செ. 71.)

[சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளால் பயனில்லை என்பதும் சகச நிட்டையே முத்தி சாதனம் என்பதும் இதனால் வலியுறுத்தப்பட்டன. சிவயோகம் எனும் குருத்து — சகச நிட்டை. குருநாதன் சொன்னகருத்து — சகச நிட்டைக்குரிய மௌனோபதேசம்.]

சகச நிட்டை என்பது ஓங்காரத்துட் பொருள் என்னும் மௌன மந்திராதிக்ய வித்தையைச் சற்குருநாதன் அருளாற் பெற்றுப் பயில்வதனால் அடையப்படுவது. மௌனம் மகாரம் என்பன ஒன்றே. மனக்குரங்கானது எவ்விடத்தும் தாவிச் சமஷ்டியில் வியஷ்டியாய் வியாபித்துக் கெட்டுப்போகாமல் சமஷ்டியில் சமஷ்டியாயே வியாபகம் பெற்றுப் பேரின்பத் தடம் புகச் செய்யும் பெரும் கருவியாயும் பேரின்ப இடமாயும் பொருளாயும் விளங்குவது அரிய பெரிய மகாரம் என்று அறிதல்வேண்டும். சித்தர் பெருமானாகிய சட்டை முனிவர் இதனைக் குறித்துப் பின்வருமாறு அருளியிருக்கின்றனர்.

மௌனவித்தையேதென்றால்மூன்றெழுத் [தென்பார்
மாட்டுகிற இனங்காணார் மார்க்கங்காணார்
மௌனவித்தை யாவதென்னவாய் மூட [லென்பார்
மாமூதற்குதிரையினாலாவதென்ன ?
மௌனவித்தை கேட்டிருப்பார் கூட்டறவு [காணார்
வாய்மூடிவழியோடே நாதங்கேளார்
மௌனவித்தையாசான்றான் தூண்டிக் [காட்டில்
மணிமுதலாய்த் தச நாதங் கேட்குந்தானே.

இவ்வாறு சித்தர் நூல்களில் மௌனவித்தையே பல பரிபாஷைகளால் முக்கியமாகக் கூறப்படும். இது அரிய பெரிய ரகஸியம். வாயோடு

கண்மூடி ஓராங்கு வீற்றிருக்கும் போலி நிட்டையானது மௌன நிலை அன்று என்பதும், மௌன நிலை என்னும் சகச நிட்டையானது கயிலை முதற் குரவனாகிய சற்குருநாதன் அருளால் அடையப்படுவது என்பதும் இதனால் நன்று வலியுறுத்தப்பட்டன. ஈண்டுத் 'தசநாதம்' என்பன மெய்யடியாரால் கேட்கப்படும் சுத்த நாதங்களைக் குறித்தனவாகும். (திருமந்திரம் 3-ம். தந். 7-வது தியானம் செ. 9,10, பார்க்க).

## புத்திரகிரியார் புலம்பல்

வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடேகண்மூடித்தழுவிநிற்பதெக்காலம்.

[“வாயோடு கண்மூடி மயக்கமுற்று நிற்றல்” சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளாகிய உபாசக நிட்டைகளை உணர்த்தி நின்றன. “தாயோடு கண்மூடித்தழுவி நிற்றல்” சகச நிட்டையை உணர்த்தி நின்றது.]

மகார வித்தையின் இயல்பு எம்போலிய சீவர்களால் அறிந்து இயம்ப ஒண்ணாதது. சகச நிட்டையாளர்களாகிய தத்துவப்பெரியார்க்கேயன்றி மற்றைய சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர்க்கு எட்டாதது. சகச நிட்டையாளர் உலகர்போல் வாழ்ந்து அருந்தல் பொருந்தல் அமைந்து ஒப்புர வொழுகுவர். அன்றிக் காடு மலைகளிலும் ஆற்றங்கரைகளிலும் பிற இடங்களிலும் மண் பெண் பொன் என்பனவற்றை வெறுத்து வாயோடு கண்மூடி மயக்கமுற்று வீற்றிருந்து அசேதனத்துவம் அடைந்து மாண்டுபோகும் அசட்டு நிட்டையாளராகார். சாகாமல் தாண்டித் தனிவழி செல்லும் சகச நிட்டையாளர்க்கு ஏகாந்தமான இடம் எதற்கு? அவர்களுக்கு யாதும் ஊரே. யாவரும் கேளீர்.

## குதம்பைச் சித்தர் பாடல்

சாகாமல்தாண்டித் தனிவழி போவோர்க்கு
ஏகாந்தமேதுக்கடி குதம்பாய்
ஏகாந்தமேதுக்கடி
(ஷை சே. 13.)

[தனிவழி—முத்திநெறி — அமலப்படியேற்றம். “தனிவழிக்குத் துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமே” (கந்தரலங்காரம்) என்றனர் அருணைகிரி நாதர். வேலும் மயிலும் என்றால் என்னே? அவை தாம் விமல மடைந்த உயிரும் உடலும் என்க. இவ்விரண்டுமே துணையாகும். இவற்றால் நினைத்த வெல்லாம் கைகூடும் என்க.]

சகச நிட்டையாளர்க்கும் சாமானிய சனங்களுக்கும் வேற்றுமை தெரிவிக்க முடியாது. அவர் எந்நேரத்தும் எத்தொழிலைச் செய்யினும் சகச நிட்டை உடையவரே யாவர். பின்வரும் பிரமாணங்களும் சகச நிட்டையின் இயல்பையும் அதற்குரிய மௌனவித்தையின் இயல்பையும் சகச நிட்டையாளராகிய மெய்யடியார் இயல்பையும் நன்று வலியுறுத்துதல் கண்டு கொள்க.

## பட்டினத்தார் பாடல்

வெட்டாதசக்கரம் பேசாதமந்திரம் [வேறொருவர்க்
கெட்டாதபுட்ப மிறையாததீர்த்த [மினிமுடிந்து
கட்டாதலிங்கங் கருதாதநெஞ்சங் [கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோ குருநாதன் [மொழிந்ததுவே.

மாயநட்டாரையு மாயாமலமெனு [மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியேபுறப்பட்டு [மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக்கூடிப் [பின் றாயைமறந்
தேயுமதே நிட்டை யென்றானெழிற் கச்சி [யேகம்பனே.

மாத்தானவத்தையு மாயாபுரியின் [மயக்கத்தையும்
நீத்தார்தமக்கொரு நிட்டையுண்டோ [நித்த னன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து [விழிதுயின்று
பார்த்தாலுலகத் தவர்போ லிருப்பர் [பற்றற்றவரே.

[“நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ” என்பதில் “நிட்டை” என்பது குறிப்போடு கூடிய முயற்சியால் அடையப்படும் சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளை உணர்த்தி நின்றது. சகச நிட்டையுடைய மெய்யடியார் உலகர் போல் வாழ்ந்து ஒப்புர ஒழுகுவார் என்பது இதனால் நன்கு பெறப்படும்.]

குருநாதன் பக்குவ சீவனைச் சாதக யோகங்களால் மையல் என்னும் கடலில் பையப் பையக் கொடு போந்து பாசமெனும் தாழுருவி உய்யும் நெறிகாட்டிய பின்னேயே சகசநிட்டைக்குரிய மௌனோபதேசம் செய்தருளுவன். பாசமெனும் தாழ் உருவப்படுதற்கேற்ற சாதகங்களும் சீவர்களது சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ற ஏற்ற வகையாகவே அமையும். திருப்பெருந்துறைக் குருநாதன் மணிவாசகப் பெருமானுக்குச் சகச நிட்டைக்குரிய மௌனோபதேசம் செய்தமை பின்வரும் திருவாக்கால் நன்கு புலப்படும்.

## திருவாசகம்

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் [கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் [தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் [துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா [ரச்சோவே.

(ஷை அச்சோப்பதிகம் செ. 7.)

சகச நிட்டையுடைய மெய்யடியார் உடலுயிர் அமலமடைந்து அருளாய் வெளியாய் உலகு கண்டிட மறைந்து உண்மை முத்தியடைதல் வேத உண்மையாகிய சத்தியமேயாகும். மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் நிட்டை இன்னது என்பதும், செயற்கை நிட்டைகளாகிய சவிகற்ப நிர்விகற்பங்

( 8-ம் பக்கம் பார்க்க )

# பெண்பாற் புலவர்கள்

யாழ்ப்பாணம் வேலணையூர்,

**பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம்.**

அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே உரியது)

(34-ம் வாரத்தொடர்ச்சி)

## சங்க கால ஔவையார்

தங்கூற்ருக வன்றிப் பாடி இரத்தற்குரிய விறலி முதலியவர்களின் கூற்ருக இவர் பாடினுர் எனக்கொண்டால், இவர் பாணர் குடியினர் என்பது பொருந்தாதெனின், இவர் விறலி கூற்ருகப் பலவிடத்துக் கூறியிருக்கின்ருராதலினுலும், "காவினெங் கலனே சுருக்கினங் கலப்பை" எனக் கூறினராதலினுலும், தமிழ் வேந்தர்களால் பேணப்பட்டு வந்த பாணர் குடியிற் பிறந்தவர் என்பதால் வரும் இழுக்கொன்றின்மையாலும் இன்னும் பிற எதுக்களாலும் இவர் பாணர் குடியிற் பிறந்தவ ரென்பதே பொருந்து மென்க. நிற்க.

நம் ஔவையார் இளமையிலேயே இயலிசை நாடகமெனும் முத்தமிழினையும் திருத்தமுற நன்கு கற்று நல்லிசைப் புலமை மெல்லியலார் தம் தலைவியராகவும் விறல்பட ஆடும் விறலியராகவும் விளக்க முற்றிருந்தார். தங் குல வாழ்க்கையாகிய பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டு பழந் தமிழ்ப்புரவலர் அவைக் களந்தோறுஞ் சென்று தம்புலமைத் திறனையும் ஆடல் பாடல்சளின் விறலையும் வெளிப்படுத்தி அவராலளிக்கபட்ட பொருள் பெற்று வாழ்ந்தனர்.

இவர் காலத்தில் கடைபெழுவள்ளல்களில் ஒருவனும், மழவர்க்குத் தலைவனும் எழுமன்னரை ஏக காலத்தில் வென்றவனும், தகடூரின் தலைவனுமாகிய அதியமான் நெடுமானஞ்சி வாழ்ந்து வந்தான். அவன் பலவிதச் சிறப்புகளுடன் வள்ளியோனுய் விளங்குவதை அறிந்த ஔவையார் அவனிடத்துப் பரிசில்பெற வெண்ணி அவனை யடைந்து புகழ்ந்து பாடினர். அவனே அருந்தமிழ்ச் சுவையை அறிந்து நுகரும் ஆற்றலுடையவனுதலால் அவரைத் தன்னுடன் சில நாளுறைடச் செய்யவேண்டுமென்னு மவாவால் பரிசிலீயாது நீட்டித்தான். அவன் எண்ணத்தை அறியாத ஔவையார் அவன் செயல்கண்டு சினம் மிகுந்தவராய் அவனைப்பார்ப்பதற்கும் இசையாதவராய் அவனது வாயிற் காவலனை நோக்கி,

'வாயில் காப்போய்! கொடையையுடையாரது செவியிடத்துச் சொற்களாகிய விதையை விதைத்துப் பரிசிலாகிய தானியத்தை விளைவிக்கும் மனவலியுடையவர்களும், மேன்மை பெறுதற்கே வருந்துகின்றவர்களுமான இப் பரிசில் வாழ்க்கையையுடைய பாவலர்க்கு அடையாத வாயிலைக் காப்போய்!! அதிகமான் நெடுமானஞ்சி தன்னையறியானே? என்னை அறியானே? அறிவும் புகழுமுடையார் இறந்தாராக விவ்வுலகம் வறியதாய்ப் போய் விடவுமில்லையே! ஆதலால் இப்பொழுதே புறப்படுகின்றேம். எமது யாழ் முதலான கருவிகளை மூட்டையாய்க் கட்டித் தூக்குகின்ருேம். எங்கட்கு இவனன்றி இடம் இல்லையோ? யாம் எத்திசைச் செல்லினும் அத்திசையில் எம்மை அன்போடுபசரித்துச் சோறிடுவார் புலருளர். இவற்றை நும் அரசனுக்கு உரைப்பாயாக.'

எனக் கோபத்துடன் கூறிவிட்டுப் புறப்படுதற் கெழுந்தார்,

(தொடரும்)

---

(7-வது பக்கத்தொடர்ச்சி)

களின் சிறுமையும், அவற்ருல் உண்மைப் பயன் இன்மையும், இயற்கை நிட்டையாகிய சகச நிட்டையின் அருமை பெருமையும், அதுவே முத்தி நெறி என்பதும் ஒருவாறு உணரத் தகும். பூரணமான சகச நிட்டையின் இலக்கணம் திருவாசகத் திருப்படையாட்சித் திருப்பதிகத்தால் நன்கு விளக்கப்பட்டது. அமயம் நேர்ந்துழி அப்பதிகப் பொருள் விளக்கிக் கூறப்படும். [சுபம்.]

---

"வித்தகம்."

வருட சந்தா விவரம்

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3—0—0

மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0—0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry Le Gérant, R. Nagarattinam